நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்
පරිවාස හා ළමාරක්ෂක සේවා දෙපාර්තමේන්තුව
**DEPARTMENT OF PROBATION AND CHILD CARE SERVICES**
வடக்கு மாகாணம் උතුරුපළාත NORTHERN PROVINCE
மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்.
මීනාච්චි අම්මන් පාර, පන්නෛ, යාපනය.
Meenadchchi Amman Road,Pannai, Jaffna

எமது இல/මගේ අංකය./My No:- NP/30/03/01/PSDG/2025 திகதி /දිනය/Date :- 01.01.2025

# பாதிக்கப்பட்ட/பாதிப்படையக்கூடய நிலையிலுள்ள சிறுவர்களின் நிலைபேறான சமூக வலுப்படுத்தலை உறுதிப்படுத்தலும், பாதுகாப்பு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலும்
# (Provincial Specific Development Grant – PSDG)

மேற்படி விடயம் தொடர்பாக நன்னடத்தை சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் தனது அபிவிருத்தி செயற்பாடுகள், பாதிப்புக்குள்ளான சிறுவர்களைப் பாதுகாத்தல் என்பவற்றுடன் சிறுவர்கள் பல்வேறு விதமான பாதிப்புகளுக்கு உள்ளாவதை தவிர்க்கும் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்திவருகின்றது. அதன் ஒரு கட்டமாக பாதிக்கப்படக்கூடிய நிலையிலுள்ள சிறுவர்களையுடைய குடும்பங்களை வலுவூட்டுதலின் மூலம் வேறு நபர்களிடம் தங்கியிருப்பதைத் தவிர்த்து சுயமாகவும் பாதுகாப்பாகவும் வாழும் சூழலை ஏற்படுத்தல், பாதுகாப்பான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் துஸ்பிரயோகங்களுக்கான சாத்தியப்பாட்டினைக் குறைத்தல், தங்குமிட வசதிகளை உறுதிப்படுத்தல் மற்றும் தூய்மையான, பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவித்தல் மூலமாக சிறுவர்கள் அபிவிருத்தி நிலையங்களை நாடுவதைத் தவிர்த்தல் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டசிறுவர்களை அவர்களின் குடும்பங்களுடன் மீளிணைத்தல் போன்ற கருப்பொருள்களின் அடிப்படையில் கீழ்வரும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

அ. சமூக வலுவூட்டல் திட்டம்

1. சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், விடுதிகள் நந்தவனம் பாதுகாவல் இல்லம், சான்றுபெற்ற பாடசாலை, அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் என்பவற்றிலிருந்து மீளிணைப்பு செய்யப்பட்ட சிறுவர் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத் திட்டம்
2. சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், விடுதிகள், நந்தவனம் பாதுகாவல் இல்லம், சான்றுபெற்ற பாடசாலை, அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் என்பவற்றில் தங்கியுள்ள, மீளிணைப்பு செய்யப்பட்ட வேண்டிய சிறுவர் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத் திட்டம்
3. மிகவும் பொருளாதாரப் பாதிப்பு நிலையிலுள்ளதென இனங்காணப்படும் பொருத்தமான நபர்களுக்கான வாழ்வாதார திட்டம்.
4. சிறுவர்கள் அவர்களின் குடும்பத்துடன் ஒன்றாக வாழவைக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு அனுமதி கோரிவரும் குடும்பங்களின் வாழ்விற்கான உதவித் திட்டம்.

Sujievaa Sivathas
Commissioner
Department of Probation and Child Care Services
Northern Province

ஆணையாளர்
Commissioner
කොමසාරිස්

அலுவலகம்
Office 021 222 4782
කාර්යාලය

சட்டப்பிரிவு
Legal Unit 021 205 7133
නීති වහන්තය

e-mail : pccsnp@gmail.com
Fax : 021 205 7103

ஆ. பாதுகாப்பு உட்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்கல்

1. சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், விடுதிகள், நந்தவனம் பாதுகாவல் இல்லம், சான்றுபெற்ற பாடசாலை, அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் என்பவற்றிலிருந்து மீளிணைப்பு செய்யப்பட்ட/செய்யப்படவேண்டிய சிறுவர் குடும்பங்கள்
2. தேவைப்பாடுள்ள, மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையிலுள்ளதென இனங்காணப்படும் பொருத்தமான நபர் குடும்பம்

ஆகிய பயனாளிகளுக்கான

1. மலசலகூடம் நிர்மாணம்/திருத்தம்
2. பாதுகாப்பற்ற கிணறு திருத்தம்/கிணறு நிர்மாணம்
3. வீடு திருத்தம்
4. வீடு நிர்மாணம்

இ. பாதுகாப்பான கல்வி நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல்

1. நிறுவனமயப்படுத்தலுக்குள்ளாகும் நிலையிலிருக்கும் வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்குதல்
2. பாடசாலைக்கு மிக நீண்ட தூரம் நடந்து செல்லக்கூடிய பாதுகாப்பற்ற வீதிகளினூடாக பாடசாலைக்கு நடந்து செல்லும் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்குதல்

மேற்படி வேலைத்திட்டங்களை அமுல்ப்படுத்தல் தொடர்பாக பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

## 1. பயனாளிகளைத் தெரிவுசெய்தல்

சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், விடுதிகள், நந்தவனம் பாதுகாவல் இல்லம், சான்றுபெற்ற பாடசாலை, அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் ஆகியவற்றில் தங்கவைக்கப்பட்டுள்ள/புனர்வாழ்வளிக்கப்படுகின்ற சிறுவர்களுக்கான **இடஅமர்வுக்குழு கூட்டத் தீர்மானம்**

பாதிப்புக்குள்ளான சிறுவர்களுக்கான **சம்பவமாநாடு/சம்பவமீளாய்வு அறிக்கை**

பொருத்தமான நபர்களுக்கான **சமூக அறிக்கைகள்**

போன்ற அறிக்கைகளினால் பரிந்துரைக்கப்படும் சிபார்சுகளுக்கு அமைவாக,

1. சமூக வலுப்படுத்தல் - வாழ்வாதாரம்
2. பாதுகாப்பு உட்கட்டமைப்பு வசதிகளை உறுதிப்படுத்தல்
3. பாதுகாப்பான கல்வி நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கான உதவி

போன்ற தேவைப்பாடுடைய சிறுவர்/குடும்பங்கள், பிரிவு நன்னடத்தை அலுவலரினால் சிபார்சு செய்யப்பட்டு சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டு முன்னுரிமைப்படுத்தப்பட்ட பட்டியல் ஆணையாளருக்கு முன்னளிக்கப்படும்.

திணைக்களத்திற்கு குறித்த நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கமைவாக முன்னுரிமைப்படுத்திய பட்டியலிலிருந்து பயனாளிகள் தெரிவுசெய்யப்படுவர்.

அதன் பின்னர், தேவையேற்படின், சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர், பிரிவு நன்னடத்தை உத்தியோகத்தர்/அபிவிருத்தி உத்தியோகத்தர், விடயப் பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தருடன் ஆணையாளர்/உதவி ஆணையாளர் நேரில் சென்று தெரிவு செய்யப்பட்ட பயனாளி தொடர்பாக சாத்தியவளத்தன்மை உறுதிசெய்யப்படும்.



Sujievaa Sivathas
Commissioner
Department of Probation and Child Care Services
Northern Province

தெரிவு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட பயனாளிக்கான உதவித்திட்டத்திற்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்/பிரதம எந்திரி இடமிருந்து பெற்றுக்கொண்டு சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தரின் சிபார்சுடன் ஏனைய தேவையான ஆவணங்களுடன் கொடுப்பனவிற்காக அனுப்பி வைத்தல் வேண்டும்.

## 2. திட்டங்களை அமுல்ப்படுத்தல்

### 1. ஆடு மற்றும் மாடு வளர்ப்புக்கான நடைமுறை

ஆடு மற்றும் மாடு வளர்ப்பு தொடர்பாக கொள்வனவுக்கான ஆடு மற்றும் மாடுகளைத் தெரிவுசெய்யும் பொறுப்பு பயனாளிக்குரியதே. அவரால் தெரிவுசெய்யப்படும் மாட்டினை அல்லது ஆட்டினை பிராந்திய கால்நடை அலுவலக குழு ஊடாக கால்நடையின் வயது, இனம், பால் உற்பத்தி அளவு, இனவிருத்திக்கான சாத்தியப்பாடு, வருமானம் ஈட்டக்கூடிய தன்மை போன்ற விடயங்கள் உறுதிப்படுத்தப்படும். ஆடு மற்றும் மாட்டுக் கொட்டில்கள் அமைக்கப்படும்போது மாகாண கால்நடை அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட மாதிரி அளவுப்பிரமாணங்களின் அடிப்படையிலேயே அமைக்கப்படல் வேண்டும்.

### 2. கோழி வளர்ப்பு

கோழி வளர்ப்பு கோருபவர்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப கோழிகளின் எண்ணிக்கை மற்றும் கூட்டின் அளவுகள் தீர்மானிக்கப்படும். கோழிகளின் எண்ணிக்கைக்கேற்ப கூடுகளின் அளவுப்பிரமாணங்கள் மாகாண கால்நடை அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட மற்றும் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட மாதிரிகளின் அடிப்படையிலேயே நிலக்கோழிக்கூடுகள்/நடமாடும் கோழிக்கூடுகள் அமைக்கப்படல் வேண்டும்.

### 3. வீட்டுத்தோட்டம்

வீட்டுத்தோட்டத்திற்கான உதவி கோருபவர்கள் உரிய அளவான காணி வைத்துள்ளார்களா அல்லது குத்தகைக்குப் பெற்றுள்ளார்களா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். நிலைபேறான அபிவிருத்திக்கு முக்கியத்துவம் வழங்கப்படுதல் வேண்டும்.

### 4. கடை/வர்த்தக நிலையம்

கடை அல்லது வர்த்தக நிலையம் கோருபவர்கள் முயற்சியாளரா, முன்னர் கடை நடாத்திய அனுபவம் உள்ளவரா அவரால் தெரிவுசெய்யப்பட்ட இடம் வர்த்தகம் செய்யக்கூடிய அல்லது வருமானம் பெறக்கூடிய சாத்தியப்பாடு உள்ளதா என்பதை ஆராய்தல் வேண்டும். சிறிய கடைகள் அமைக்கப்பட உள்ள இடத்தின் காணி பயனாளிக்கு உரியதா என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

### 5. ஏனையவை

ஏனைய வாழ்வாதார உதவிகள் கோரியவர்கள் அந்த வேலை தொடர்பான அனுபவமும் முயற்சியும் உள்ளவர்களா என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். வாழ்வாதார திட்டத்தை கருத்திற்கொள்ளும்போது உணவு பதனிடல், தச்சு வேலை, சிறு வியாபார முயற்சிகள், கல் அரிந்து விற்பனை செய்தல், ஏனைய கொங்கிறீற் வடிவமைப்பு வேலைகள், பால் உற்பத்திப் பொருட்கள் தயாரித்தல், பெறுமதிசேர் திட்டங்கள் போன்ற ஏனைய சுய தொழில்களை விரிவுபடுத்துவதும் சந்தை வசதிகளை மேம்படுத்திக் கொடுத்தல் என்பன கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.



Sujeevaa Sivathas
C... ssioner
Department of Probation and Child Car
Northern Province

6. **பாதுகாப்பு உட்கட்டமைப்பு வசதிகள்**

பாதுகாப்பு உட்கட்டமைப்புகளுக்கான கட்டுமான வேலைகளுக்கான பயனாளி தெரிவானது வாழ்வாதாரத்திற்கான பயனாளி தெரிவு போன்றே நடைமுறைகளுக்கு உட்பட்டு நடைபெறும். இவ்வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது காணி பயனாளிகளின் உரிமையுடையதாக இருக்க வேண்டும் அல்லது அரசினால் அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காணியாக இருத்தல் வேண்டும். அத்துடன் கிணறு, மலசலகூடம் போன்ற கட்டுமான வேலைகளின்போது உரிய உள்ளூராட்சி சபைகளின் அனுமதி ஏற்கனவே பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

## 3. திட்டம் ஒன்றிற்கான கொடுப்பனவின் உச்ச எல்லை

1. வாழ்வாதார உதவித்திட்டம் - ரூபா 200,000.00

2. பாதுகாப்பு உட்கட்டமைப்பு வசதிகள்
   - வீடு நிர்மாணம் - ரூபா 2,000,000.00 (02 மில்லியன்)

   - ஏனைய பாதுகாப்பு உட்கட்டமைப்பு விரிவாக்கம்
   - ரூபா 200,000.00 (தொழில்நுட்ப உத்தியோகத்தரது தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கமைவாக)
   - ரூபா 500,000.00 (பிரதம எந்திரியின் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கமைவாக)

3. பாதுகாப்பான கல்வி செயற்பாடுகளுக்கான உதவி - ரூபா 50,000.00

## 4. வேலை நிறைவு அறிக்கை

கட்டுமான வேலைகளாயின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்/பிரதம எந்திரியின் பணி நிறைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஏனைய வேலைகளுக்கான பணி நிறைவு அறிக்கை நன்னடத்தை உத்தியோகத்தரினால் தயாரிக்கப்பட்டு சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 5. முதலாம் கட்ட கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்

1. செவ்வைத்தாள்
2. விண்ணப்பப்படிவம் பயனாளியினால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
3. சம்பவ மாநாட்டறிக்கையின் மூலப்பிரதி.
4. பொது 35 படிவம் (25000.00 ரூபாவுக்கு மேற்பட்ட கொடுப்பனவாயின் 25.00 ரூபா முத்திரை ஒட்டப்பட்டு ஒப்பமிடப்பட்டிருக்க வேண்டும்)
5. பயனாளியின் நிதி கோரிக்கை கடிதம் அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது நன்னடத்தை உத்தியோகத்தர் ஒப்பமிட்டு சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தரின் சிபாரிசுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்
6. மாடு, ஆடுகள் கொள்வனவு எனின் விற்பனை செய்பவரின் சம்மதக் கடிதமும் கால்நடை உற்பத்தி சுகாதார சேவைகள் திணைக்கள குழுவின் அறிக்கையும் இணைத்தல் வேண்டும்.
7. கட்டுமான வேலைகளாயின் அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்/பிரதம எந்திரி இன் மதிப்பீட்டறிக்கை இணைத்தல் வேண்டும்.



Sujievaa Sivathas
Commissioner
Department of Probation and Child Care Services
Northern Province

8. தேசிய அடையாள அட்டை பிரதி (உண்மைப் பிரதி நன்னடத்தை உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்படல்வேண்டும்).
9. வங்கிக் கணக்குப் புத்தகப் பிரதி (உண்மைப் பிரதி நன்னடத்தை உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).
10. வங்கிக் கணக்கில் உள்ள பெயரும் அடையாள அட்டையில் உள்ள பெயரும் மாற்றம் ஏற்படுமாயின் ஒரே நபர் என்பதனை உறுதிப்படுத்த தகுந்த ஆதாரம் இணைப்படல் வேண்டும்.
11. உபகரணங்கள் வழங்கவேண்டியிருப்பின் அதற்கான கோரிக்கைக் கடிதம் பயனாளியிடமிருந்து பெறப்படல் வேண்டும். அக் கடிதத்தில் கொள்வனவு செய்யவேண்டிய சாதனத்தின் பெயர், (Brand/Capacity & Specification) உள்ளடக்கியதாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

## 6. இரண்டாம், ஏனைய கட்டங்கள் அல்லது இறுதி கட்ட கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

1. செவ்வைத்தாள்
2. ஏற்கனவே வழங்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான பௌதீக முன்னேற்ற அறிக்கை புகைப்பட ஆதாரங்களுடன்
3. கட்டுமான வேலைகளுக்கான இறுதிக் கொடுப்பனவாயின் அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்/பிரதம எந்திரி இடமிருந்து பணி நிறைவு அறிக்கை பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.
4. பொது 35 படிவம் (25000.00 ரூபாவுக்கு மேற்பட்ட கொடுப்பனவாயின் ரூபா 25.00 முத்திரை ஒட்டப்பட்டு ஒப்பமிடப்பட்டிருக்க வேண்டும்)
5. பயனாளியின் நிதி கோரிக்கை கடிதம் அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது நன்னடத்தை உத்தியோகத்தர் ஒப்பமிட்டு சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தரின் சிபாரிசுடன் அனுப்பிவைத்தைல் வேண்டும்
6. மாடு, ஆடுகள் கொள்வனவு எனின் கால்நடை உற்பத்தி சுகாதார சேவைகள் திணைக்கள குழுவின் அறிக்கை
7. கட்டுமான வேலைகளாயின் அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்/பிரதம எந்திரி இன் மதிப்பீட்டறிக்கை.
8. இறுதிக் கட்ட கொடுப்பனவாயின் பணி நிறைவு அறிக்கை

## 7. பயிற்சி வழங்குதல்

பயனாளிகள் தெரிவு செய்த துறை தொடர்பான மேலதிக பயிற்சிகள் தொடர்புடைய திணைக்களங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். பயிற்சிகள் பயனாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்திலோ அல்லது பிரதேச மட்டத்திலோ ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

## 8. பயனாளிகளின் பங்களிப்பு

வாழ்வாதாரம் மற்றும் கட்டுமான திட்டங்களின்போது இயலுமான சந்தர்ப்பங்களில் பயனாளிகளின் பங்களிப்பு இடம்பெறச்செய்வது பொருத்தமானதாகும். உதாரணமாக மாடுவளர்ப்பின்போது அதற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்கு திட்டத்தின் பங்களிப்புடன் மாடு வழங்கப்படுவதாயின் அதற்குரிய கொட்டில்கள் பயனாளியினால் அமைத்துக்கொள்ளுதல் பொருத்தமானது.



Sujeeva Sivathas
Commissioner
Department of Probation and Child Care Services
Northern Province

9. **தொடர் கண்காணிப்பு**

மேற்படி வேலைகள் பூரணப்படுத்தப்பட்டதிலிருந்து குறைந்தது 03 மாதங்களுக்கொரு முறை கண்காணித்து முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ் அறிக்கைகள் நன்னடத்தை உத்தியோகத்தர்களினால் அல்லது சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தரினால் தெரிவுசெய்யப்பட்ட உத்ததியோகத்தர்கள் கடமைப்பட்டியலுக்கு அமைவாக கண்காணிப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் அல்லது நிலையப்பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தரினால் நேரடியாகப் பார்த்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

எமது திணைக்களத்தின் PSDG திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களைக் கருத்திற்கொண்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். நிதிக் கையாள்கைகள் அனைத்தும் அரச நிதி பிரமாண ஒழுங்கிற்கு அமைய முன்னெடுக்கப்படல் வேண்டும்.

Sujievaa Sivathas
Commissioner
Department of Probation and Child Care Services
Northern Province

ஆணையாளர்
நன்னடத்தை, சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்
வடக்கு மாகாணம்.

நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்